# ஆத்மஜோதி



# பொருளடக்கம்.

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| எங்குமுள்ள தெய்வத்தை இதயத்துள்ளே நாடு | — | 129 |
| நித்திய தோத்திரம் | — | 130 |
| உரிமையும்—கடமையும் | — | 131 |
| சர்வம் பிரம்மமயம் சற்குரு ரமணமயம் | — | 134 |
| உலகநோய்தீர்க்கும் ஒப்பற்ற சஞ்சீவி | — | 135 |
| திருக்கேதீச்சுவரம் | — | 136 |
| மதத்தின் உபயோகம் | — | 137 |
| பிரார்த்தனை | — | 140 |
| பாரதசக்திமலர்ச்சி | — | 144 |
| நன்மைத்துணுக்குகள் | — | 146 |
| ராமநாமம் | — | 148 |
| நம் அருட்செல்வம் | — | 149 |
| உண்மையான சிவவழிபாடு எது? | — | 152 |
| மார்க்கம் | — | 154 |
| திருவள்ளுவரும், கடவுட்கொள்கையும் | — | 156 |
| ஆத்மசித்திக்கான சாதனங்கள் | — | 158 |
| செய்தித்திரட்டு | — | 160 |




# ஆத்ம ஜோதி.

ஓர் ஆத்மீக மாதவெளியீடு.

சந்தா விபரம்:

ஆயுள் சந்தா ரூ. 75/- வருடச்சந்தா ரூ 3/-

- தனிப்பிரதி ச. 30.

"ஆத்ம ஜோதி" நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்).

ஓம்.

# ஆத்ம ஜோதி.

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

சோதி 2. || விரோதிவூ பங்குனிமீ || சுடர் 5.

## எங்குமுள்ள தெய்வத்தை இதயத்துள்ளே நாடு!

தெய்வத்துக்குத்தெய்வம் சிந்தையிலேதானிருக்க
வையகத்தில் ஏனலைந்தாய்—சின்னத்தங்கம்
வாட்டமெல்லாம் விட்டிடடீ.
அங்குமிங்குமெங்குமந்த ஆண்டவன் தானிருக்க
அங்குமிங்குமலையாதே—சின்னத்தங்கம்
ஆடிப்பாடி மகிழ்ந்திடடீ.
ஆடம்பரங்களெல்லாம் அடியோடேநீக்கிவிட்டு
கேடறியாத்திருவடியை—சின்னத்தங்கம்
கிட்டநீ கண்டிடடீ.
[சொன்னதற்கு
முழுதும்உண்மையென்றுமுன்னாள் மோனகுரு.—
பழுதொன்றுமில்லையடி—சின்னத்தங்கம்
பவுத்திரமாய் வாழ்ந்திடடீ.
எத்திக்குமீசனடி இருந்தபடியேயிருந்து
பத்திசெய்துபார்த்திடுவாய்—சின்னத்தங்கம்
பழிபாவம் இல்லையடீ.
வித்தகம்நீபேசாதே வேறொன்றைநாடாதே
செத்தாரைப்போல்திரிவாய்--சின்னத்தங்கம்
தெய்வம்நீகண்டிடுவாய்.
மெத்தக்கதைபேசாதே மேன்மக்களைஏசாதே
சத்துருவும்மித்துருவும்—சின்னத்தங்கம்
தானொன்றாய்ப் போகுமடி.

—ஸ்ரீயோகர் சுவாமிகள்.

# நித்திய தோத்திரம்.

## இறைவனே!

சகலலோகங்களுக்கும் ஒரு தனித் தலைவனே!

நீயே அறியப்பட வேண்டியவன்; நீயே துதிக்கப்படவேண்டியவன்; நீயே உணரப்படவேண்டியவன்; எங்கள் எண்ணமெல்லாம் எப்பொழுதும் உன்மேலேயே இருக்கட்டும்!

உனது மகிமையை நோக்கவும், உனது உணர்வால் எங்களை நிறைத்துக் கொள்ளவும் எங்களுக்கு அறிவு கொடு!

ஆத்மீய வாழ்க்கையில் எங்களுக்குப் பலமும் உறுதியும் கொடுத்தருள்வாய்!

நீதிமார்க்கத்தை நிலையாகக் கடைப்பிடிக்க எங்களுக்குப் போதித்தருள்வாய்.

குறைபாடுகளிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும் எங்களைக் காப்பாற்றியருள்!

எங்கள் எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் உனது சாந்தியும் ஆசியும் நிலைபெறுவனவாகுக!

—சுவாமி பரமானந்தர்.

# உரிமையும் கடமையும்.

[ஆசிரியர்.]

உரிமையென்னும் பதம் அன்பு, சிவம், முருகு என்பன போன்ற பழைய தனித்தமிழ்ச் சொல். அதன் பல கருத்துக்களுள் 'கடமை'யும் ஒன்றாக அமைந்திருப்பதால் அது மிகவும் பெருமையுடைத்து. ஒன்றினுக்கொன்று எதிரானவைபோலத் தோன்றும் இரு கருத்துக்களை ஒருங்கே பெறும் இந்த அருமை வேறு எம்மொழியிலும் இல்லையெனலாம். நல்வாழ்வுக்கு வள்ளுவர் பெருமான் வகுத்த வழியைத்துருவி ஆராய்ந்து பார்த்தால் உரிமையும் கடமையும் எப்படி ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாது பிணைந்திருக்கிறதென்பதும், உரிமையே கடமையாகவும் கடமையே உரிமையாகவும் எவ்விதம் மாறுகின்றனவென்பதும் தெற்றெனவிளங்கும். ஒரு தனிமனிதனுக்குள்ள உரிமையே பின்னர் அவன் சமுதாய மனிதனாக மாறும்போது கடமையாய் விடுகின்றது. முந்திய நிலையில் பிறப்புரிமைகளாகக் கருதப்பட்டு வந்தனவற்றையே, ஒருவன் தனது சமுதாயத்தின் நன்மைக்காகத், தியாகஞ்செய்வது அவனின் முக்கிய கடமையாகின்றது. எனவே உரிமைக்குப் புனிதமும் பிரகாசமும் அளிப்பது கடமையேயாம். தன் கடமையைச் செய்யாத மனிதனுக்கு உண்மையில் உரிமைக்கு உரிமையில்லை யெனவுங் கூறிவிடலாம்.

ஒருவன் தன்மகனுக்குச் செய்யவேண்டிய கடமை அவனைக் கற்றவர் கூட்டத்தில் முந்தியிருக்கும்படி கல்வியில் மேம்படச்செய்வதாகும். எனக்கூறியவள்ளுவர் அதே அதிகாரத்தில், மகன் தன் தந்தைக்குச் செய்யவேண்டிய கைம்மாறு "இவன் தந்தை இவனை மகனாகப்பெறுவதற்கு என்னதவஞ்செய்தானோ?" எனப் பிறர்புகழ்ந்து பாராட்டுஞ் சொல்லாகும்என்றனர். இங்கே உரிமையும் கடமையும் மிகவும் உயர்ந்தபடியில் அழகாக விளக்கப்பட்டுள்ளன. சிறுவயசில் குழந்தையைக் காப்பாற்றிக் கல்விகொடுத்து வளர்ப்பது பெற்றோரின் கடமையும் குழந்தையின் உரிமையும் ஆகிறது. அதே கடமையும் உரிமையும், பிற்காலத்தில் பிள்ளை வளர்ந்து பெற்றோர் முதியவர்களானபோது, முறையே உரிமையும் கடமையுமாக மாறிவிடுகின்றன.

இதிலடங்கியுள்ள தத்துவமே வாழ்வுவட்டமானது குடும்பத்திலிருந்து குலமாகவும், குலத்திலிருந்து சமுதாயமாகவும் சமுதாயம் நாடாகவும், இறுதியில் நாடுகள் உலகமாகவும், விரிந்து விரிந்து பெரிதாகும்போது, பரிணமித்தால் தான் உலகில் அமைதியும் சாந்தியும் நிலவக்கூடும். ஆசான்—சீடன், அரசன்—பிரஜை, முதலாளி—தொழிலாளி முதலாய உறவுகளிலெல்லாம் உரிமையின்றிக் கடமையும் கடமையின்றி உரிமையும் இருக்கமுடியாது. ஒன்றைவிட்டு மற்றையதைப் பிரிக்கவேமுடியாது. அப்படிப் பிரிந்தபோதெல்லாம் அழிவும் அமைதியின்மையுமே ஏற்பட்டனவென்பதற்கு உலக சரித்திரம் சான்றாகும். உலகில் தோன்றிய எத்தனையோ நாகரீகங்களும் சாம்ராஜ்யங்களும் மண்ணோடு மண்ணானது கடமையைக்கைவிட்டு உரிமையைமாத்திரம் வற்புறுத்திய காரணத்தினாலேயாம். இந்தச் சட்டத்திற்குச் சமயங்களும் உட்பட்டனவே. இந்துமதம், பௌத்தம், சமணம், கிறிஸ்தவம் வெவ்வேறு காலங்களில் செல்வாக்கிழந்து சீர்குன்றியதற்குக் காரணம் அம்மதக் குருமார்களும் புரோகிதர்களும் தங்கள் கடமைகளில் தவறி, அரசியல் விஷயங்களில் உரிமை பாராட்டி ஆதிக்கம் பெற முயற்சித்ததினாலேயன்றோ!

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் இயந்திர நாகரிக முதிர்ச்சியின் பயனாக, பெரும்பாலான மக்கள் பெற்றது உரிமையின்றிக் கடமைமாக்கிரஞ்செய்யும் அடிமைவாழ்வு. இந்த அடிமைவாழ்வினது பொருளாதாரச் சூழ்ச்சியினரால் தேசபக்தியெனும் பொன்முலாம் பூசப்பட்டு, ஒவ்வொருநாடும் தனது அயல் நாடுகளுடன் இருக்கவேண்டிய அன்புறவைப் புறக்கணித்து, கடமையைக் கைவிட்டு உரிமையேபேசி, போட்டி பொறாமைப் பூசலை வளர்க்க, இறுதியில் உலகம் முழுவதையும் அடுத்தடுத்து இரு அகோரயுத்தங்களுக்கிரையாக்கிவிட்டது. இதன் பயனாகத்தோன்றியதே இன்று நாம் நேராகக்காணும் கடமையைக் கைவிட்டு உரிமையைமட்டும் கோரும் புரட்சிக்கொள்கை. நெடுங்காலமாக அடக்கப்பட்டு ஒடுங்கியிருந்தவர்கள் உரிமைவேட்கை பிறந்ததும் தங்கள் கடமையை மறப்பதில் வியப்பொன்றுமில்லை. அவர்களும் ஏனையவர்கள்போல் சொந்த அனுபவம் மூலமாகவே பாடம் படிக்கமுடியும்.

மனிதரின் உரிமைவேட்கை நாடியின் ஓட்டத்தை நன்குணர்ந்த பரம வைத்தியரான காந்தியடிகள் தமது பூதவுடலைவிட்டுப்

புகழுடம்பு எடுப்பதற்குச் சிலதினங்களுக்குமுன் புதுடெல்லியில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டமொன்றில் செய்த உபதேசம் உலக சமாதானத்தை விரும்பும் ஒவ்வொருவரதும் நித்திய சிந்தனைக்குரியதாகும். அது பின்வருமாறு.;—

"உலகிலேயுள்ள மக்கள் யாவரும் தங்கள் உரிமைகளை நிலை நாட்டுவதில் இன்று அதிகம் சிரத்தைகொண்டுள்ளனர். ஆனால் எவராவது அவ்வுரிமைகளுடன் சம்மந்தப்பட்ட கடமைகளைப் பற்றிச் சிந்திக்கிறார்களில்லை. எல்லாரும் தத்தம் உரிமையை மாத்திரம் வற்புறுத்திக்கொண்டுபோனால் சமூகத்தில் குழப்பந்தான் ஏற்படும். மக்கள் தங்கள் உரிமைகளை வற்புறுத்துவதிலும் பார்க்கத் தங்கள் கடமைகளைச் செய்வதிலேயே அதிக கவனம் செலுத்தினால், எங்கள் சமூக நிலைமை உன்னதமாகும். ஒரு சிலர் தமது உரிமைகளை மாத்திரம் அனுபவிக்க, மற்றவர்கள் கடமைகளை மாத்திரம் செய்யமுடியாது. உரிமைகளைப் பிரயோகிக்குமுன் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளையும் செய்தாகவேண்டும். கடமைகளைச் செய்யாமல் உரிமையை மாத்திரம் பாராட்டுவோன் தனக்கே அநர்த்தம் தேடியவனாவான். கணவன்—மனைவி, முதலாளி—தொழிலாளி, ஜெமின்தார்—குடியானவர்கள், அரசன்—பிரஜைகள் என்பவர்களுக்கிடையே, இப்படியாகக் கடமையும் உரிமையும் சரியாக இருத்தல் வேண்டும். கடமையைச் செய்யாமல் உரிமையை மாத்திரம் அனுபவிக்கக்கூடாது."

இந்தியக் குடியரசுத்தினக் கொண்டாட்டத்தில் ராஜாஜீயின் பேச்சிலும் அவர் எழுதிய கட்டுரைகளிலும் காந்தியடிகளின் மேற்கூறிய உபதேசத்தின் விரிவுரையைக் காண்கின்றோம். தருமத்துக்குப்பயந்து ஆத்ம சுதந்திரத்துடன் தத்தம் கடமைகளை நிறைவேற்றுவதே மேலான நெறியென்பதை வற்புறுத்தி, "சுதந்திரம் பெற்றதன் முடிவு அனைவரும் தத்தம் சுயநலன்களைப் பெருக்கிக் கொள்வதல்ல. குடியரசில் உரிமைகள் பல உண்டு. ஆனால் அவை அனைத்தும் கடமைகளின் நிழல்களேயன்றி வேறல்ல...... கடமைகளைச் செய்வதில் மனம் வெறுக்காமல் உரிமைகளை எண்ணி மனம் வாடுவது, மரத்தைவெட்டித் தள்ளிவிட்டு நிழலை விரும்புவதுபோலாகும்" என்றார் ராஜாஜீ. காந்திஜியும் ராஜாஜியும் கண்ணன் காட்டியவழிசென்றோர். அவர்கள் வாழ்க்கையாலும் வாக்காலும் உலகுக்குபதேசித்தது கீதையின் சாரத்தையேயாம்.

# சர்வம் பிரம்மமயம் சற்குரு ரமணமயம்.

[ஆனந்தம்மா, திருவருணை]

பல்லவி

குருகுல வாசஞ் செய்வாய் மனமே—அனுதினமும்
குருகுல வாசஞ் செய்வாய். (குரு)

அநுபல்லவி

ஜெயவீர ராஜசிங்கம் சின்மய ரமணனிடம்
அயராத பத்தியினால் அவன்மய மாகிநின்று (குரு)

சரணங்கள்

1 ஆத்மீக அலைவீசும் அத்வைதர் சந்நிதியில்
சாத்வீக சாந்தியுற்ற சற்சன ருடன்கூடி (குரு)

2 அருணையிற் பழுத்திட்ட அன்புக் கனிரசத்தை
உருகிநின் றடியரெலாம் உண்டுபசி தீர்த்தாரென்று (குரு)

3 வேதங்கள் போற்றிட விண்ணவர் ஏவல்செய்ய
நாதாந்த வெளிதனில் நயந்து கலந்தபடி (குரு)

4 உலக முழுவதற்கும் உண்மைவலை வீசிநின்றார்
மலபரி பக்குவர்கள் வந்ததில் சிக்கிவிட்டார் (குரு)

5 நிர்வாணி யாகிநின்றார் நீணிலத்தின் ஆசைவென்றார்
சர்வாத்ம சித்திகட்கும் சாட்சியாய் நிற்கின்றார் (குரு)

6 கரைகாணுக் கப்பலைப்போல் கலங்கித் தவிப்பவர்க்கு
துறைகாட்டு வேனென்ற துவசமுங் கட்டிக்கொண்டார் (குரு)

7 அண்டர் முனிவர்போற்ற அந்தணர் அர்ச்சித்தேற்ற
தொண்டரைக் காக்கவே தோன்றினர் இவ்வுருவாய் (குரு)

---

முற்பக்கத்தொடர்ச்சி.

உரிமைகாரணமாக உதித்த பாரதப்போரின் நடுவேதோன்றிய கீதை கடமையை விளக்குவதுபோல் வேறு எந்தச் சமய சாஸ்திரமும் விளக்கவில்லை. இன்றைய உலக நோய்க்கு அதுவே சஞ்சீவியென வற்புறுத்தும் சுத்தானந்தப் பெரியாரின் அழகிய முன்னுரையைப் பிறிதோரிடத்தில் காணலாம். கீதாயோகம் மனிதன் தன்னைத்தானுளும் ஆத்மீகவாழ்வை மாத்திரங் குறித்ததல்ல. மனையாட்சி, உலகாட்சி எல்லாவற்றினதும் கருமங்களையெல்லாம் அதின் முறைப்படி நன்கமைக்கமுடியும்.

# உலகநோய் தீர்க்கும் ஒப்பற்ற சஞ்சீவி.

———:-:———

[சுத்தானந்தர்,]

உள்ளும் புறமும் கடவுளைக் கலந்த சுத்த சுதந்திர சமத்வ வாழ்வையே கீதை உபதேசிக்கிறது. அது அறிவுப் பசிக்கு அரிய விருந்து; வீழ்ந்தோரை உயர்த்தும் வீரக்கனல்; வாழ்வுக்குச் சஞ்சீவி; பந்தவினைகளைப்போக்கும் சுதந்தர சக்தி; மனப்போர்களை ஒழிக்கும் ஞானவாள். கீதை உலகத்திற்கே மெய்வழி வேதமாகும்; பூரணயோகதீபிகையாகும்.

கீதை உலக ஸமரஸத்தாய்; ஞானமுற்றிய தருமனுக்கும் ஸஹாதேவனுக்கும் உரைக்காது, பரமலௌகிகனை அர்ஜுனனுக்கு அதையுரைத்தது, அதன் பொதுத்தன்மையைக் குறித்தேயாம். படுபாவிக்கும் அதில் கதிமோட்சம் உள்ளது. அது ஒலிவடிவான தர்மசக்தி; கர்மவீரசக்தி. அது துன்பக்கடலைத் தாண்டுவிக்கும் அன்புத்தோணி; ஆன்மச்சுடரைத் தூண்டும் ஆசான். சச்சிதானந்தத்திற்கு வழிகாட்டும் நித்தியத்தோழன். உலகை ஆன்மாவிலும், ஆன்மாவை உலகிலும் விளக்கும் தெய்வ ஸமரஸக்கண்ணாடி. அது ஒரு குறித்த சாதிமதத்தின் பெயராற் சொல்லப்பட்டதன்று. கீதை கர்மயோகம் மட்டுமன்று, பக்தியோகம் மட்டுமன்று; அது இதயேசனையறிந்து அவனது ஞானத்தில், அவன் அன்பில், அவனுக்காகவே நிஷ்காமிய கர்மம் செய்யத்தூண்டும் பூரணயோகதீபிகையாகும். அது சர்வயோக ஸமன்வய சாத்திரம்; அறிவும் அன்பும் அருட்பணியும் ஒன்றுசேர்ந்த அத்யாத்ம வாழ்வில் அது ஸாதகனை ஊன்றுகிறது. கீதை ஸந்நியாசிகளுக்கே ஏற்றதன்று. அதைச்சொன்னவனும் ஸந்நியாசியல்லன், கேட்டவனும் அல்லன்; இருவரும் பழுத்த இல்லறவீரரே. வினைமுளைத்து, அன்பலர்ந்து, ஞானம் பழுத்து, ஆண்டவனுக்கே அப்பழத்தை நிவேதிக்கும் அகத்துறவையே கீதைபோற்றுகிறது. கீதை வீரன் ஆத்மவீரன்; எதற்கும் அஞ்சாதவன்; ஆண்டவனுக்கே ஆளாகி, அவன் மயமாகவே அனைத்தையுங் கண்டு, காலத்திற்கேற்றபடி அவனுணையைப் புரிந்து வாழ்பவன்.

அசுரமாயத்தை ஒழித்து, உலகில் அமரவாழ்வை நிலைநாட்டுவதே அவன் கட்டளை. அதற்கு அத்யாத்ம யோகமே வழி; இப்போதே கீதையை உண்மையாக அனுஷ்டிப்பதற்குக் காலம் வந்துள்ளது. நோய்வரும்போதே மருந்துக்கு அதிகத்தேவை ஏற்படுகிறது. இப்போதுலகம் அசுரநோயால் இரத்தம் கக்கி உயிர் துடிக்கிறது; உலகநோய் தீர்க்கும்சஞ்சீவிபோன்றது. இச்சஞ்சீவி சாக்ஷாத் பகவானுல் கொடுக்கப்பெற்றது. ஆத்மசக்தி, அமரானந்தம் இரண்டும் மனிதான்மாவின் அபிலாஷையாம். உலகிற் பொங்கிக் கொந்தளிக்கும் பற்பல நவீன இயக்கங்களும், கிளர்ச்சிகளும் அதை நிறைவேற்றவே தள்ளாடிச் சென்றுகொண்டிருக்கின்றன. ஒற்றுமை, அமைதி, விடுதலை முயற்சிகளெல்லாம் இந்த முடிவிற்கும் இன்னும் வழிதெரியாதுதிரிகின்றன. கலியின் கொடுமை கடுமையாகவிருக்கிறது; அசுரபலங்களின் குண்டாட்டம் பசுநிலத்தை இரத்தபூமியாக்குகிறது. எங்கும் இருள், ஒளி, அமைதி, இன்பம் என்று அன்பர் முறையிடுகின்றனர். இந்தப் பயங்கரத்திடையே கண்ணன் குழலூதி நம்மை அழைக்கிருன்; பிருந்தாவனலீலை தொடங்குகிறது. அவனது பாஞ்சஜன்யம் நம்மைச் செயலுக்கு எழுப்புகிறது. ஆத்மவீரங்கொண்டு எழுவோம்!

---

## திருக்கேதீசுவரம்.

தேடித்திரு மாலோடயன் தேராவடி முடியோன்
கூடிக்குனி யடியாருளங் கொண்டுநடம் புரிவோன்
கேடிற்றிரு வருளாம்நிதிக் கேதீச்சுரத் தானைப்
பாடிற்பெறும் வானோர்களும் பருவும்பத மன்றே.

கந்தங்கமழ் மலர்கொண்டடி யார்கள்தொழு தேத்தும்
சந்தம்பொலி பதிகத்தொலி யோங்கிமுக டுடைக்கும்
கொந்தம்தொடைக் கொன்றைதிகழ் கேதீச்சரம் குலவும்
எந்தையென துள்ளும்புற மொழியாதுறை சிவமே.

பல்லாரறிந் திகழும்படி நகைசெய்துயிர் மாய்ப்பித்
தொல்லாதென மீட்டும்புவிக் கொழிக்கும்வகை செய்தும்
செல்லாநெறி செல்லுஞ்சிறு ஏழையுளந் திருப்பி
யெல்லாப்பணி தனக்காக்கினன் கேதீச்சரத் தானே.

பண்டிதர் நவரத்தினம்

# மதத்தின் — — உபயோகம்.

சுவாமி சித்பவானந்தர்.

பிரயோசனத்தைக் கருதாமல் மூடனும்கூட ஒருவிஷயத்தில் ஈடுபடமாட்டான் என்பது ஆன்றோர் வாக்கு. அங்ஙனமாயின் மதத்தின் உபயோகம் என்ன? மதத்தின் முக்கிய உபயோகம் அது நமக்குக் கடவுளறிவைக்கொடுப்பதுதான். இது யாவரும் அறிந்த உண்மை ஆனால், உலகில் உள்ள மக்களிற் பலர் பரத்தைப் பற்றிக் கவலை கொள்ளுவது கிடையாது. இகத்தைப்பற்றி மட்டுமே அவர்கள் சிரத்தை கொள்ளுகின்றனர். இத்தகையவருக்கு மதத்தினால் பயனேதாகிலும் உண்டா? நிச்சயமாக உண்டு. கடவுள், ஞானம், மோக்ஷம்—இவை சம்பந்தமான யாவையும் மறந்து விடுவோம். அப்பொழுதும் மதம் உலகிற்கு அவசியமானதொரு அம்சமே யாகும். பரிபூர்ணத் தன்மையை நமக்கு அளிப்பதே அல்லது மனிதனைக் கடவுளாகச் செய்வதே மதத்தினுடைய மேலான பயன் என்பதை நாம் மறுக்கவில்லை ஆனால் வாதத்தின் பொருட்டு அந்தப் பயனை ஒதுக்கி வைப்போம். எப்பொழுதும், மதமில்லாவிடில் மக்கள் உலகம் மாசுறுவது திண்ணம்.

மதமே மனிதனுடைய மனத்திற்கு வெகு உயர்வான பயிற்சியாகும், என்று விவேகானந்த சுவாமிகள் கூறியுள்ளார். சூக்ஷ்மமானவஸ்துக்களை ஆராய்ந்தால்தான் மனம் அதிகசக்தியையும்கூர்மையையும் பெறும்: மற்ற ஆராய்ச்சிகளைக் காட்டிலும், மதஆராய்ச்சியே புத்திக்கு அதிக உழைப்பைத்தரக்கூடியது.

சமூக ஒற்றுமை, உலக ஒற்றுமை இவை ஏற்படுவதற்குப் பல வழிகள் உண்டாயினும், மதசம்பந்தமாக ஏற்படும் ஒற்றுமையே நீடித்து நிற்கக்கூடியது; கூடியவரையில் சுயநல சிந்தனையைக் குறைவாகக் கொண்டது. மதத்தின் பெயரால் போர்களும், அடக்குமுறையும் சரித்திரத்தில் ஏற்பட்டுள்ளன, என்பது உண்மையே. ஆனால், அதற்கு மதம்காரணமாகாது. மதத்தின்மீது புகைபோலச் சூழ்ந்திருக்கும் மூட நம்பிக்கையே காரணமாகும். அம்மூட நம்பிக்கை மறந்து, எம்மதமும் உண்மையே என்ற அறிவு ஏற்பட்டால், மத சம்பந்தமான சச்சரவுகள் இல்லா தொழியும்.

துயரமாகிற உலக வாழ்வைச் சகிக்கக் கூடியதாகச் செய்வது மதமேயாகும். மதபோதனையின் காரணமாகவே நமது உலகின்

கண் சிறு அளவிலேனும் புன்சிரிப்புக் காணப்படுகிறது. மதம் இல்லாது போயின் கண்ணீரும் பெருமூச்சும, அழுகையும் புலம்பலுமே உலகில் எங்கும் காணப்படும். இதைச்சில உதாரணங்கள் கொண்டு விளக்கலாம். நமக்கு வெகு நேசமாயுள்ளவர் ஒருவர் திடீரென உயிர் துறக்கிறார். தெளிவான வானத்திடையே இருள் மேகம் ஒன்று சூழ்கிறது. நமது இருதயம் வெடித்து விடும்போல் இருக்கிறது. அச்சமயத்தில் நமக்கு ஆறுதல் அளிப்பது எது? மதத்தின் உபதேசமேயாகும். ஆத்மாவிற்கு அழிவில்லை. "மரணம் என்பது பழைய ஆடையைக் களைந்து புதிய ஆடையை ஏற்பது போலாகும்" என்ற மத உண்மை நமக்கு சாந்தியைத்தருகிறது. வேறு சிலர் இறந்து போனவரை நினைத்து "அவன் சிவலோக பிராப்தி அடைந்தான்; கண்ணன் பாதம் சேர்ந்தான்; ஏசுவின் அருளைப் பெற்றான்,, என்று கூறி அமைதியடைகின்றனர். இதைப் பற்றிய கதையொன்றும் கூட உண்டு.

ஆசிரிய ரொருவருக்கு இரு அருமைக் குழந்தைகள் இருந்தன. ஒருநாள் அவ்விரண்டு குழந்தைகளும் மாண்டன. ஆசிரியர் அப்பொழுது வெளியிற் சென்றிருந்தார்: அவர் திரும்பி வந்து மரணச்செய்தியைக் கேட்டதும் மனமுடைந்து போவார் என்று அஞ்சிய அவரது மனைவி ஒரு யுக்தி செய்தாள். ஆசிரியர் திரும்பி வந்ததும், அவரிடம் சென்று "எனக்கொருதுயர் ஏற்பட்டுள்ளது. பல நாட்களுக்கு முன் என்னிடம் ஒரு நண்பர் இரு மாணிக்கங்களைக் கொடுத்து வைத்திருந்தார். நீண்டகாலம் அவை என்னிடமே இருந்தன. என்னுடையவையென்றே அவற்றை நான் கருதினேன் ஆனால், இன்று நண்பர் திரும்பி வந்து அம்மாணிக்கங்களை எடுத்துச்சென்றுவிட்டார். என்மனம் மிக வருந்துகிறது" என்று கூறினாள். ஆசிரியர் மனைவியை நோக்கி "பேதாய்! நீ வருந்துவதற்குக் காரணமே இல்லை, வைத்த பொருளைத் திரும்பி எடுத்துச் செல்லுவது நியாயம்தானே. இன்னாள் வரை நீ மாணிக்கங்களை அநுபவித்தாயல்லவா? அதுவே பெரும் பாக்கியமாகும் என்று கருதி நீ அமைதியாக இரு" என்றார். உடனே மனைவி ஆசிரியரை உள்ளே அழைத்துச்சென்று மாண்டுபோன இரு குழந்தைகளையும் காட்டி "கடவுள் நம்மிடம் கொடுத்துவைத்திருந்த மாணிக்கங்களைத் திரும்பவும் எடுத்துச் சென்றுவிட்டார்; வருந்தவேண்டாம்" என்று கூறினாள். இவ்வாறே குழந்தையொன்றை இழந்த மாது ஒருத்திக்குப் புத்தபகவான் "இறந்தவர் தொகை எண்ணி

றந்தது வாழ்பவர் தொகை சிறியது'' என்று உபதேசித்து அவள் சாந்தியை அடையுமாறு செய்தார். புருஷனை இழந்த ஸ்திரீ ஒருத்தி தன்கையிலிருந்த இரும்புக்காப்புகளை நீக்கிவிட்டுப் பொற்காப்புகளை அணியவும் அவளது உறவினர்கள் அவளைக் கடியவும் அவள் "இதுகாறும் என் கணவர் பூத உடலைத் தரித்திருந்தார். இப்பொழுது அதனின்றும் விடுபட்டு அகண்ட பிரம்மத்துடன் ஒன்றுனர். இச்சுப சம்பவத்தை முன்னிட்டு நான் பொற்காப்புகள் அணிந்தேன்'' என்றுள்.

வாழ்வில் உயரிய இலக்ஷியங்கள் இல்லாதுபோயின் வாழ்வு சுவையற்றுப் போகும். அத்தகைய உயரிய இலக்ஷியங்களில் நமக்கு ஊக்கமூண்டுபண்ணுவது, மதமேயாகும். மதப்பற்றுள்ளவன் எத்தொழிலைச் செய்த பொழுதிலும் சிறப்பாகச் செய்வான். பலனைக் கருதாமல் கருமம் புரிவான். தனதுகடமைகளைச் செய்வதில் எக்கஷ்டங்கள் ஏற்பட்டாலும் பின் வாங்கமாட்டான். உண்பது, உறங்குவது, பொருளீட்டுவது—இவற்றுல் மட்டுமேமனம்திருப்தியடைந்து விடாது. தன்னலங் கருதாத சேவை, தியாகம்—இவையும் மனசாந்திக்கு அவசியமாகும். மதப்பற்றுள்ளவன் தனது குடும்ப வேலையிலும் சரி, பொதுவேலையிலும் சரி, சிறந்த நெறியைப் பின்பற்றுவான். அஞ்சாமையைத் தருவது மதமேயாகும். ஆனந்தத்தைத் தருவதும் மதமேயாகும்.

மதத்தினுல் நமது நாட்டிற்குக் கேடு வந்து விட்டது என்று கூறுவோர் உண்மையை அறியாதவர். மற்றெந்த நாட்டைக் காட்டிலும் நம்நாட்டிற்குச் சரித்திரத்தில் வந்துற்ற ஆபத்துக்கள் வெகு அதிகம். அவ்விதமிருந்தும், நம்நாடு ஜீவித்திருப்பதற்குக் காரணம் நமது மதமேயாகும். உலகின் கேடுகளுக்கெல்லாம் முக்கிய காரணம் மதம் அல்ல; போதிய அளவு மதம் இல்லாமையே ஆகும்.

மதத்தினுல் பர சாதனங்கள் பல ஏற்படலாம். அதனுல் இகத்தில் ஏற்படும் நன்மைகளும் கணக்கில.

மதம் என்றுல் ஏதோ சில பைத்தியக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டம் என்று எண்ணக் கூடாது. மதம் என்பது வாழ்வின் உண்மையான விதி. ஜீவியத்தின் மேன்மையான முறை அவ்விதியையும் முறையையும் நாம் எவ்வளவுக் கெவ்வளவு பின்பற்றுகிறேமோ அவ்வளவிற்கு நாம் சீர்ப்படுவோம்.

# — பிரார்த்தனை. —

——(-)—(-)——

("சாரதா")

இன்று நம் இலங்கைத்தீவில் கூட்டுப் பிரார்த்தனைகள் பல இடங்களிலும் தொடர்ந்து நடந்து வருவதை அறிகின்றோம். அதன் பலனாக மக்களிடையே ஆத்ம உணர்ச்சியும் சமரசமும் ஒற்றுமையும் நிலவுவதையுங் காண்கிறோம். நம் மகாத்மா தமது உபதேசங்களில் எல்லாம் பிரார்த்தனையின் அவசியத்தைப்பற்றி அடிக்கடி வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். பிரார்த்தனையின் பயனாற்சித்தசுத்தியடைகின்றது. ஓடும் மனம் ஒருமனப்படுகின்றது. ஒற்றுமை உண்டாகின்றது. உள்ளம் கனிகின்றது. உள்ளந் தூய்மையடைந்த இடத்தில் இறைவன் உறைகின்றான். உள்ளத்தூய்மையுடன் நாம் எதை வேண்டினும் இறைவன் உடனே அளித்து விடுகின்றார். அங்கிலையில் சமரசம் உண்டாகின்றது. "நான்" எனது என்ற அகங்கார மமகாரங்கள் மறைகின்றன. பிரார்த்தனையிற் கலந்து கொள்வதால் அடியார்கள் நேயம் உண்டாகின்றது. அவர்கட்கெல்லாம் அன்புப்பணி ஆற்றும் அரும்பேறு கிடைக்கின்றது. இறைவனிடம் எங்கள் விருப்பங்களையெல்லாம் தெரிவிப்பதற்குப் பிரார்த்தனை ஒரு சாதகமாயிருக்கின்றது. நாங்கள் தனித்து ஓர் அறையிலோ அல்லது தனிஇடத்திலோ இருந்தும்இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஆலயங்களில் சென்றும் பிரார்த்திக்கின்றோம். கோவில் கட்குச்சென்று வணங்க வேண்டுமென்ற வழக்கத்தையும் எங்களிடையே ஆத்ம ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காகவே முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். ஒருதனியிடத்தில் நாம் இருந்து எம்புலன்களை ஒருவாறடக்கி ஒருசில நேரத்திற்குத்தான் பிரார்த்தனை செய்ய முடிகின்றது. அடுத்த கணம் மனம் களைத்து எம்மை ஏமாற்றி வேறுவழியில் ஓடிவிடுகின்றது. பின் அம்மனத்தைத்திருப்பி அதே வழியிற் கொண்டுவருவதானல் பிரார்த்தனையில் வெறுப்பேற்பட்டுவிடுகின்றது. ஆனல் ஆலயங்கள் போன்ற பொதுவிடங்களிலே எல்லோரும் ஒருங்கு கூடிப்பிரார்த்தனை செய்யும் பொழுது எவ்வளவு நேரமாயினும் களைப்பேற்படுவதில்லை. நேரம் போவதேதெரிவதில்லை. அலுப்பேற்படுவதில்லை. காரணம் எங்கள் உள்ளம் முழுவதும் ஒருமனப்பட்டுப் பிரார்த்தனையில்

ஒன்றியிருப்பதுதான். வேறு எண்ணங்கள் உட்புகவிடாது ஈஸ்வ ரநாமத்தை உச்சரித்த வண்ணமேயிருக்கின்றோம்; இனிய தேவா ரபாராயணங்களைக் கேட்கின்றோம். எல்லோரும் ஒருமித்து ஒரே பண்பாட்டுடன் வேண்டும்போது இறைவன் வேண்டியதைக்கொடு க்காமல் விடமுடியுமா? கொடுத்தே விடுவார். ஒருங்குகூடிப் பிரா ர்த்திக்கும் வழக்கம் இன்றல்ல நம்நாட்டில் தொன்று தொட்டுத் தொடர்ந்தே வந்திருக்கின்றது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் வர லாறுகளிலெல்லாம் அவர்கள் ஒருங்கு கூடிப் பிரார்த்தித்திருப்ப தாக அறிகின்றோம். அத்தகைய பெரியோர்களெல்லாம் அப்படி யாக ஒன்றிப் பிரார்த்தித்திருக்கும்போது சதா இம்மாயையினி டையே கிடந்து உழலும் நம்போன்றவர் உள்ளங்களை ஒருமைப் படுத்த பிரார்த்தனை ஒரு முக்கிய சாதகமாகவே யிருக்கின்றது. இதையே எத்தனையோ பெரியார்களும் சாதுக்களும் அடிக்கடி கூறி பற்பல இடங்களில் கூட்டுப்பிரார்த்தனைகளையும் தொடங்கி யும் வைத்துப் போந்தனர். இதைக் கடைப்பிடிக்கு வாழ்கின் றோமா? என்றால் அதுதானில்லை. எங்கள் வாழ்க்கையின் முக்காற் பகுதி உண்பதிலும் உடுப்பதிலும் வேடிக்கை விநோதங்களிலும் ஓடிமறைந்து கொண்டேயிருக்கின்றது. ஆனால் இறைவனை உள் ளூற நினைந்துருகிப் பிரார்த்தித்து வருந்திய நாட்களெத்தனை யென்றால் கைவிரல் எண்ணிமடக்கி விடலாம். இதற்காக வருந்திய நாட்களே கிடையாது. இதையே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்கள்.

> ஒருநாளைக் கொருதரம் ஒருநொடிப்பொழுதேனும்—உனைப்
> படைத்தவனை எண்ணிச் சுகித்ததுண்டோ—மனமே

என்ற பாட்டில் அழகாக நம்பாழும் மனத்திற்குச் சாட்டைஅடி கொடுத்திருக்கின்றார். ஆதலால் நாங்கள் ஒவ்வொருவரும் எங் கள் வாழக்கையில் ஒரு கணநேரமாயினும் இறைவனைப்பிரார்த்தி க்க வேண்டாமா? எங்கள் நாளாந்த கடமைகளுடன் காலைமாலை பிரார்த்தனையும் ஒரு கடமையாகக் கருதவேண்டும். அதற்காக ஒரு ஐந்து நிமிஷநேரமாயினும் ஒதுக்கப்படல் வேண்டும். அந்நே ரத்தில் எவ்விதமாயினும் எல்லோரும் ஒருங்கு கூடிப்பிரார்த்திக்க வேண்டும். இதில் பெண்களாகிய நாங்களே கூடிய அளவு கவன மெடுத்தால் இதைத்தளராது நடத்தி வரலாம். இன்று எல்லா விஷ யங்களிலும் முன்னணியில் நின்று சமவுரிமை பெறும் பெண்கள்

இவ்விஷயத்தில் மாத்திரம் பின்னணியில் நிற்பதை எண்ணும் போது எங்கட்கே வெட்கமாயிருக்கின்றது. கோவில்களிலோ பிரார்த்தனைகளிலோ, வீட்டுக்கடமைகளுடன் பங்கு பெறுவதென்ருல் நேரம் போதுவதில்லையென்று எங்களில் எத்தனையோ பேர் கூறுகிறோம். அந்த நாளில் சினிமாத்தியேட்டரில் நல்லபடம் ஓடுவதாயின் கட்டாயம் அக்கடமைகளுடன் இதுவும் போய்ப் பார்த்திருக்கின்றோம். ஓய்ந்த நேரத்தில் அயலவருடன் வீண் வம்பளக்கின்றோம். அந்நேரத்தில் அவர்களையெல்லாம் ஒன்று கூட்டிப்பிரார்த்தனையைத் தொடங்குங்கள். நீங்கள் நாலுநாட்களுக்கு முன் மாதிரி காட்டினீர்கள் ஆனுல் அயலவரும் அதே கொள்கையைக் கொண்டுவிடுவார்கள். அருமைச்சோதரிகளே! வருங்கால மக்களை பக்தி ஒற்றுமை அன்பு ஜீவகாருண்யம் வீரம் என்பன ஒருங்கே திகழும் ஆத்ம தீர வீரர்களாய் ஆக்கிவைக்கும் பொறுப்பு நம்மிடத்திலல்லவா? இருக்கிறது. எம் குழந்தைகள் எங்களையே பின்பற்றிவாழும் தன்மை நிறைந்தவர்களல்லவா? அவர்களைத்தாழ்த்துவதும் உயர்த்துவதும் எம் கையிலல்லவா இருக்கிறது. ஆதலால் எங்கள் அட்டவணையில் காலைமாலை இவ்வளவு நேரம் பிரார்த்தனைக்கென்று ஒருநேரம் வகுத்து வையுங்கள். அந்தநேரத்தில் என்ன அவசியமாயினும் விட்டுவிட்டுத் தவருது குழந்தைகளையும் மற்றோரையும் பூசை அறையில் ஒருங்கு கூட்டி ஒருமித்துப் பிரார்த்தனையைத் தொடங்குங்கள். இனிய தேவார பாராயணங்களைப் பாடுங்கள் குழந்தைகளையும் ஒன்று கூடிப் பாடச்செய்யுங்கள் ஈஸ்வர நாமத்தையும் ஒன்று கூடி உச்சரியுங்கள். பூசையறையை அலங்கரிக்கும் பணியை உங்கள் குழந்தைகளிடமே விட்டுவிடுங்கள். பின் குழந்தைகளே பிரார்த்தனை நடத்தும் நிலைக்கு வந்துவிடுவார்கள். இதை உங்கள் குழந்தைகட்காகவே நீங்கள் வாழ்க்கையிற் கொண்டு வரப்பாருங்கள். வெள்ளிக்கிழமை தோறும் கோவிலுக்கு வீட்டிலுள்ளவர் எல்லோரும் சேர்ந்து கட்டாயம் போகவேண்டுமென்று வகுத்துவிடுங்கள். பொது இடங்களில் நடக்கும் பிரார்த்தனைகட்கோ பிரசங்கங்கட்கோ குழந்தைகளை கூட்டிச் செல்லுங்கள். நம் மகாத்மா பிரார்த்தனையிற்றவறிய நேரமோ, நாம் அவரின் வாழ்க்கையில் அறிந்ததில்லை. அவரின் இடையருப் பிரார்த்தனையினலன்றோ இன்று அகில உலகும் அவரைப் போற்றி நிற்பதுடன் ஆற்றுதற்கரிய அரிய செயல்களையும் ஆற்றினர். ஆதலால் பிரார்த்தனையின் மகத்துவத்தை நாம் நன்கறிந்து வீண்

காலம் போக்கலாமா? பிரார்த்திக்கும் போது இறைவனுடைய நாமத்தைச் சொல்ல எங்களில் எத்தனையோ பேர் வெட்கப்படுகின்றோம். தேவையற்ற வார்த்தைகள் பேசுவதற்கு நம் வாய் கூசுவதில்லை. ஆனால் ஈசுவர நாமம் உச்சரிக்கவா? வெட்கப்படுகின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் ஓரிடத்தில்

"வாயே வாழ்த்துகண்டாய்"

என்று தம்திருவாயிடம் கூறுகின்றார் ஆதலால் வாயின் பயனால் இறைவனுடைய நாமத்தை வாயாரப் புகழ்ந்து பாடல்வேண்டும் அதற்குரிய தருணமும் பிரார்த்தனையே. ஆதலால் நாம்எல்லோரும் ஒன்றுகூடி இறைவனைப் பிரார்த்திப்போமாக.

---

உலகுய்ய வந்தவர்கள் எடுத்துக் காட்டும்
　　உண்மைநெறி பொருள்தேடிக் குவிப்ப தன்று
கலகமனப் பான்மையூ ரெங்கு மூட்டிக்
　　காசினியி லதிகாரஞ் செலுத்த லன்று
கலைகளெலாங் கற்றுயர்ந்த பட்டம் பெற்றுக்
　　கண்ணிலே மண்தூவுங் 'கருணை' யன்று
உலையேற்ற வழியின்றிப் பசியால் வாடும்
　　ஏழைகளுக் குதவியுளங் குளிர்வ தாமே.

பேச்சினு மெழித்திலும் மூளைக்கு மன்பே
　　பிறருயிரை வதைத்துண்டு கொழுத்த பாயக்
கூச்சலிடும் மக்கள்மீது குண்டு போடும்
　　குறைவிலா நிறைவுள்ள சமய வாழ்வு
பூச்சன்று சமயதத் துவங்கள் வாழ்வில்
　　பொங்கியொளி வீசிமெய் யன்பு நீரைப்
பாய்ச்சியருள் பழுக்கவைக்கும் பரிமளிக்கும்
　　பார் புகழு மமரவாழ் வதுவே கண்டாய்.

"சுதந்திரஜீவன்"

## —::பாரதசக்தி மலர்ச்சி::—

[முத்தி]

காலைச் சூரியன் கண்கொண்டு பார்க்கின்றான்—காவிரியாற்றை, கொஞ்சித்தழுவுகின்றான். அக்குளிர்ந்த வேளையில் அருகேயுள்ள பூஞ்சோலையிலிருந்து பூமணக்காற்று ஓமென்றிசைக்கிறது. சுவாமியவர்கள் கண்மூடி நிஷ்டையில் இருக்கிறார்கள். தியானவூற்றில் புதுயுகக் குழலிசை பொங்கிவருகிறது. ஆகாயமாகிய குடையின் கீழ் பசும்பொன் தோற்றமுடைய இயற்கைத்தேவி அமுதப் புன்னகை அருளுகின்றாள். தியானப் பறவை சிறகடிக்கின்றது. அது வானக்கனவிலே வாழுகின்றது. இந்த நிலையில் பாரதக் காட்சி உதயமாகிறது.

சுவாமிகளின் கனவெலாம் கதையாய் உருவாகின்றன. அக்கதையெலாம் கவியாய்ப் பூக்கின்றன. கவிகள் நிரம்பிய காவியம் வாழ்வின் ஓவியமாகிறது. அவ் ஓவியத்தில் இராஜதம், தாமதம் சாத்வீகம் என்னும் முக்குணவிரிவு தீட்டப்படுகின்றது. இதுவே பாரத சக்தி.

அம்மையப்பன் அருட்பெருஞ் சோதியானுடைய அருளால் இயலிசை நாடகமாகிக் கற்பக விருட்சமாகப் பொலிந்தது. இக்கற்பகத்திற்கு ஆணிவேர் ஆத்துமதத்துவம். கிளைகள்-உலகப்பெரியார் உள்ளம். மலர்—யோகம் கனி-போகம் பொருள்-பூரண வாழ்வு. இதே பீடிகையில் பாரதசக்தி மகாகாவியத்தை மலைகளிலும் நதிகளிலும் வானங்களிலும் கோயில்களிலும் குளங்களிலும் தூய்தவக் குடில்களிலும் தியானத்தமர்ந்து மோனத்திலே உணர்ந்து சுவாமிகள் படலம் படலமாகப் பாடிமுடித்தார்கள். அவையெல்லாம் ஐந்து பெருங்காண்டங்களாகப் பகுக்கப்பட்டன அவை:-சித்திகாண்டம், கௌரிகாண்டம், சாதன காண்டம், தானவகாண்டம், சுத்தசத்திகாண்டம் என்பன. அவ்வைந்து காண்டங்களும் வாழ்வில் ஐந்து பெருநிலைகளாம்.

கவிக்குயில் பாரதியார் நல்ல காவியம் எனப் புகழ்ந்தார். மகரிஷி ரமண பகவான் மகிழ்வுறக் கேட்டார். புதுவை நவயுக யோகி அரவிந்தர் இம்முயற்சி நல்லது என்றார். முன்பே நான்கு

முறை திருத்தியமைக்கப்பட்ட காவியம் ஐந்தாம் முறை புதுவையிலிருந்து புதுக்கியமைக்கப்பெற்று வெளிவந்திருக்கிறது. அன்னை சக்தியின் அன்புத்துணையால் இப்பெருங்காவியம் இலகுவதுலகே.

எனதுயான் என்னும் மமகார அகங்கார இறுமாப்பினாலும் ஆசைத்தினவினாலும் ஆணவக் கொதிப்பினாலும் போட்டி பொறாமையாலும் பொய்யொழுக்கங்களாலும் மனங்கெட்டனர் மாந்தர். இம்மாந்தர் தமது மதியை தம்மினத்தைக் கெடுத்தலிலேயே உபயோகித்தனர். ஆயுட்காலம் முழுவதும் ஆயுதக்கிடங்கிற் செலவழித்தனர். குத்துவெட்டு, கொலைஎன்றசொற்களே எங்கும்கேட்டன. தெருவெலாம் இரத்தவெள்ளமானது. அணுவெடி வீசி அரக்கராயினர் மாந்தர். இப்படிப்பட்ட மாந்தரது மனத்தையும் இனத்தையும் திருத்தி காமம் வெகுளி கலக்கமில்லாது உள்ளம்களிக்க, உலகம்செழிக்க, எல்லாஉயிருக்கும் இறைவன் ஒருவனே எல்லாஉடலும் இறைவன் ஆலயமே என்னும் சமரஸஇதயம் துடிக்க, அகம்புறம்தூய்மையும் அஞ்சாஉரிமையும் அமரத்தன்மையும் மேலானயோகமுந்தருவதே பாரதசக்தியாம்.

வேதகாலத்து ரிஷிகளைப்பற்றி வேதங்கள், புராணங்களிற்பார்த்தோம். அவற்றை உணர்ந்தோமில்லை. பாரதநாட்டுப் பூரணயோகிகள் தவத்தால் விளக்கிய சக்தியை இன்று மீட்டுந்தூண்டி வேதச் சுவையும் தெய்வத்தன்மையும்சிறக்கச் சுவாமிகள் பாரத சக்தியை உலகிற்கு அருளினர்கள். இக்காவியத்தை முறைப்படி கற்றவர்கள்

"ஒன்றே கடவுள் ஒன்று சுத்தான்மா
ஒன்றே உலகுயிர் ஒன்றே வான்போல்
என்று விளங்கி எங்கும் இன்பமே
எண்ணிய புண்ணிய மெய்திடுவாரே"

இத்தகைய ஆன்மநேய ஒருமைப்பாடுடையயோகிகள் சங்கத்தால் உலகம்திருந்தி மாவலி, கலியர் போன்ற அசுரப்பகைகள் ஒழிந்து அருளரசாட்சி அவனியில் ஊன்றும். மனிதரை அதிமனிதர்களாக்கி தாய்மாரைச்சக்திமண்டலமாக்கி சுத்தான்மசித்தர் சுடர்பெருஞ் சங்கம் உலகவாழ்வாகநிலவச்செய்யும்.

பாரதசக்தியே உயிராகவும் பாரின்உள்ளமே பருவுடலாகவும் கவியுருக்கொண்டகனவுகளால் சுவாமிகள் உலகிற் பணிசெய்தார்:

— நூற்பயன் —

வீரமும் சுத்த சக்தி விளக்கமும் ஆத்ம ஞான
தீரமும் கல்வி செல்வத் திருக்களுமே பெருகியோங்கும்
பூரண சித்தி யெய்திப் பொலிந்திடும் அமரவாழ்க்கை
பாரத சக்தி தன்னைப் பயிலுக உலக மெல்லாம்.

☞ இதில் சுவாமிஎன்றுகுறிப்பிட்டது சுவாமி சுத்தானந்தபாரதியாரை.

———

# நன்மைத் துணுக்குகள்.

[திருவருணை உமா எழுதியது.]

15 தான் பெரியவன் என்னும் அகந்தையுள்ளவரையில், தனக்கொரு பெரியவனும் இறைவனை ஒருவன் அடையமுடியாது. என்றைக்கு, "எனக்கென்ன தெரியும், இதுஏன் அதுஏன் என்றுகேட்கவும் யோசிக்கவும் கூட எனக்கதிகாரமில்லை; என்னை எப்படி நடத்தவேண்டும் என்பது அவனொருவனுக்கே தெரியும்" என உணர்ந்து இறைவனிடம் தன்னை ஒப்புக்கொடுக்கிறானோ அன்றே இறைவனருள் அவன்மேற் பதிந்ததென்னலாம்.

16 தனக்கு வேண்டியதைபடையவோ வேண்டாததை நீக்கவோ கூட சக்தியற்ற மனிதன் தன் குடும்பம் பூராவும் தன்னாலேயே வாழ்வதாக நினைக்கிறான். தன் அசக்த நிலையை உணர்ந்து தன்னையே இறைவனிடம் ஒப்புக்கொடுத்து அவனருள் ஒன்றிலேயே ஈடுபட்டுவாழும் ஒருவன், எல்லாவுயிர்களையும் ரக்ஷிக்கும் அவனை அனுபவப்பூர்வமாக உணர்ந்த நலத்தினால் கவலைகளையும் பொறுப்பையும் அடியோடுவிட்டு மேலும் அருட்பிரகாசத்தில் மூழ்குவான்.

17 பரமனையறிந்து பக்திபண்ணுபவனையும் வைராக்கியத்தோடு ஞானசாதனையிலீடுபடுபவனையும்விட, தஞ்சமென்று சரணாகதிபண்ணிவிட்டு செயலோய்ந்தவனை சக்தியற்றவனென நினைப்பது அறியாமையேயாகும். தன்னையும் தன்னதென்றபிமானித்திருந்த சகல பொருள் போகங்களையும் ஒருங்கே இறைவனிடம் ஒப்புவித்தானேல் அவனே தீரத்துறந்த துறவியாய், அங்கிமிடமே அகப்பற்றுப் புறப்பற்றுக்களை விட்டொழிந்தவனாகிறான்.

18 குழந்தையுள்ளங்கொண்ட சரணாகதனை, இறைவனருளே சாதனையும் சாத்தியமுமாகித் தன் பூரணானந்த சாகரத்தில் கரைத்துவிடுகிறது. இவன் வேலையும் அருள் வேலையும் வெகுசீக்கிரத்தில் முடிவுறுகின்றன. இறைவனிடம் ஒப்புக்கொடுத்த ஆறுதலையே பற்றுக்கோடாகக்கொண்டு சென்றவழியும் வந்தவழியுங்கூடத் தெரியாமல் பாரமார்த்திகப் பாதையை கடந்துவிடுகிறான்.

19 இறைவன் அருள்வழிக்கெனத் தான் தேர்ந்தெடுத்தவர்களை ஒருநாளும் உலகை இனிக்க விடமாட்டான். இந்த ஒரு அடையாளமே, ஒருவன் தான் இறைவன் கையிலிருப்பதை அறியப்போதுமானது. உலகசுகமோ இன்பமோ சமாதானமோ ஒருவனை அடையுமானால் பாபத்தின் சோதனைக்காலம் என்று அறிய அதுவே போதுமானது. அருளுலகம் அவனுக்கு வெகுதூரத்தில் இருக்கிறது.

20 புத்தியாலும் பத்தியாலும் முன்னேறியடையப்படும் இறைவன் ஏதுமறியா அபலைகளைத் தேற்றுவதற்குத் தானே முன்னோடி வருவான். நாம் அறிவீனர்; அகங்காரம்பிடித்தவர், பெலவீனர் என உண்மையாக உணர்பவர்களுக்கே இறைவன் சொந்தம். பாபிகளையே குணமாக்கவந்தேன் என்றார் ஆண்டவன் ஏசுபெருமான். நாம் வீணர்கள் ஆண்டவனுக்கும் ஆசைப்பட்டு அற்பசுக போகங்களுக்கும் நம்மை விற்றுக்கொள்கிறோம் என்று உணர்ந்தால நாம் திருந்தமுடியும்.

21 இறைவன் தன்னைத் தேடாதவர்களையும் தேடி தனக்காக்கிக் கொள்கிறான். இறைவன் வேண்டுமென்றால் உலகம் நமக்கல்ல. உலகசுகம் வேண்டுமென்றால் மாயையின் ஆட்சிக்குள்ளாகவேண்டும். இறைவனையடுத்தால் முதலில் நிரந்தர துக்கநிவர்த்தி என்பது நிச்சயம்.

22 பரமார்த்திகவழி மிகவும் குறுகியும் பல மேடுபள்ளம் சரிவுகளோடு கூடியுமுள்ளதாகும். அவ்வழியில் செல்லவிரும்புகிறவர்கள் ஆசாபாசகோபதாபமூட்டை முடிச்சுக்களைச் சுமந்துசெல்லமுடியாதாகையால் யாவற்றையும் தூரஎறிந்துவிட்டே தனிமனிதராகச் செல்லவேண்டியிருக்கிறது. எதிர்ப்படும் கற்கள் கட்டிகள் மண்சரிவுகளால் பாதையடையாமலிருக்கும்பொருட்டு பொறுமையும் தாழ்மையும் கொண்டு சோம்பற்படாமற் குனிந்து நிமிர்ந்து வளைந்து ஜாக்கிரதையாகத்தான் செல்லவேண்டும்.

# ராமநாமம்.

[மஹாத்மாகாந்திபடிகள் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு]

## 5-ம் அத்தியாயம்.

## அவனருளைத்தேடு.

கட்டுக்கட்டாக நூல்களை வாசித்து மூளைகளைத் திணித்து உபயோகமற்ற வீணர்களாகிய எத்தனையோ மாணவர்களை யான் கடித மூலங்களாக அறிவேன். சிலர் அரைப்பைத்தியங்களாகவும் சிலர் முழுப்பைத்தியங்களாகவும் சிலர் பரிதாபப்படக்கூடிய அயோக்கியமும் ஒழுக்கமற்றவர்களாகவும் இருப்பதுகண்டு தாங்கள் எவ்வளவு முயன்றும் யோக்கியராக முடியாதிருக்கின்றதே எனும் போது யான் அவர்களைப்பார்த்து இரங்குகின்றேன். தங்களைப் பிடித்த இப்பசாசையும் தீயவொழுக்கங்களையும் ஓட்டுவதற்கு வழி என்ன என அவர்கள் கேட்கும்போது இறைவனின் முன்பு தாழ்ந்து பணிந்து இராமநாமத்தைச் செபிக்கும்வண்ணம் கூறுவதுண்டு. அப்பொழுது அவர்கள் கடவுள் எங்கே உள்ளார் எனவும் என்னமாதிரித் தொழவேண்டும் என்றும் அறியோம் என்பர்.

அந்தோ பரிதாபம் இவர்கள் நிலைதான் என்னே! "திக்கற்றவர்க்குத் தெய்வம் துணை" என்னும் தமிழ்ப்பழமொழி என் ஞாபகத்தில் என்றும் உண்டு. எவ்வித சந்தேகமுமின்றி திறந்த உள்ளத்தோடும், முழுநம்பிக்கையோடும், இப்படியான ஈனனாகிய என்னையும் இறைவன் ஆட்கொள்ளுவானோ என்ற ஐயமின்றியும் அருள்செய்யும்படி அப்பனை வேண்டல் வேண்டும். வேண்டுதல் செய்த எண்ணற்ற அடியார்க்கருளிய எம்பெருமான் உன்னைக்கை விடுவாரா? அவருக்கு நல்லவர் தீயவர் என்ற வேறுபாடில்லை. எவரும் புறம்பாகார். உன் ஒவ்வொரு பிரார்த்தனையும் பயனளிப்பதை நீ காணலாம். அதமாதமர்களது வேண்டுதலையும் ஏற்று அருள்புரிகின்றார். † இதனை என் சொந்த அனுபவத்திலிருந்து கூறுகின்றேன். இவ்வழிசென்று பரிசுத்தமடைந்த ஒருவன் யான். முதல் பரலோக ராட்சியத்தைத் தேடுகிறவர்கள், பின் ஏனைய சுக சம்பத்துக்களெல்லாம் தாமேவந்தடையப்பெறுவர்..

†குறிப்பு: மந்திரத்தை நாவினால் முணுமுணுத்தல் மட்டும் பிரார்த்தனையாகாது. ஆத்மாவைத்தட்டி எழுப்பாத இடத்தில்

# நம் அருட்செல்வம்.

——:-:——

எண்ணெயும் திரியும் உள்ளன—இருளைப்போக்குமா? இருளைப்போக்க ஒளி வேண்டும். திரியில் சுடர் விளங்க வேண்டும். ரேடியோப்பெட்டி உள்ளது; விசையை அமுக்குகிறோம். மின்சாரம் இல்லை; பாட்டுக்கேட்குமா? ரேடியோ ஓடுவதற்கு மின்சக்திவேண்டும். நமக்கு உடல், பலம், பணம் காசு உள்ளன; எனினும் மனம் அமைதியாவதில்லை. விளக்கிற்கு ஒளி, ரேடியோவுக்கு மின்சக்தி போல் வாழ்விற்கு அருட்செல்வம் வேண்டும். பொருட்செல்வம் எத்தனையிருந்தாலும் உள்ளின்பம் தராது. அருட்செல்வமே இன்பமாகும். செல்வத்துட் செல்வம் அருட்செல்வம். உலக வாழ்விற்குப் பொருள் உடல், அருள் உயிர் போன்றது. பொருளன்றி உடலின்பமில்லை. ஆடை உணவு இருக்கை ஊர்மதிப்பு, கல்வி தொழில் செல்வம் எல்லாம் பொருளால் வரும். அன்பு கருணை ஈகை, ஒப்புரவு, அமைதி, அறிவு, கலை, சுதந்தரம், ஆத்மசுத்தி, சமத்துவம், சன்மார்க்க ஒற்றுமை, கடவுளுணர்ச்சி இவையெல்லாம் அருளால் வரும். அருளுடையார் எல்லாம் உடையார். பொருள்மட்டும் கொண்டவரிடம் தன்னலம் போட்டிபொருமைகள் இருக்கும். உலக வல்லரசுகளிடம் பொருளாட்சி யுள்ளது. ஆனால் அதன் பின்னே அணுவெடிகளும், கதிர்வெடிகளும், நோய் வெடிகளும் படபடத்துப் போர்ப்பேயைக் கிளப்பிவிடுகின்றன. பொருளாட்சியும் ஸயன்ஸ் மூளையும் உலகிற்குச் சமாதானம் தரவில்லை. அருள் என்கிற அமரசஞ்சீவியை இந்நாடுகள் நெஞ்சில் வளர்த்தால், பேராசை ஒழியும்; மனம் தெளியும், தன்னைப்போலப் பிறரை மதிக்கும் தயவும் சமநோக்கமும் உண்டாகும். தாம் யாரோ அவரே பிறர், எல்லாரும் சுத்தான்ம வடிவங்கள் என்ற ஒருமையுண்டாகும். ஆன்ம நேயம் வளரும். தபசிபோலப் பிறர் பசி தீர்க்கும் கருணையும் ஈகையும் விளங்கும். பிறகு தன்னுயிர் போல மன்னுயிரைக்காணும் ஜீவதயை உண்டாகும். அப்போது மனிதன் தன் உடலைப் பெருக்கப் பிறவுயிர்களைக் கொன்றுண்ணான். உயிர்க்கருணையாலே போர்ப்பேயும் ஒழியும்; உலகம் அமைதி பொலியும். அப்போது உலகில் தனி உடைமை இராது. பொதுவுடமைச் சுயேச்சாதிகாரம் நாசவேலை செய்யாது. எல்லாம் அருளுடைமையாகும். தனக்கும் புவிக்கும் மேலே ஒரு தலைவன் இருக்கிறான் என்பதை உணர்வோம். ஆகாயத்தில் நட்-

சந்திரன்கள் எவ்வளவோ ஒளிகாட்டிப் புவனிசென்று அருணக்கதிர் கலக்கின்றன; அதேபோல் மானிடவாழ்வும் தோன்றுந்துணையான இறைவன் திருவருள் ஏவியபடியே தர்மசாதனம் செய்து, தூய ஆத்மசுத்தியில் இணைந்து, சம்பத்திலும் பேணி அனைத் திருக்கும் தாபத்தும் தீர்க்கும்வழியின. இறைவன் அருளைக் கூடும் மனிதன் முழு இன்பத்தை அடைவான். அருளின் வாழ்ந்து அருள்நிறைந்த அனுபவத்தை அடைவதே தூயமெய்வழியாகும்; இந்த வழி எல்லா மதங்களுக்கும் பொதுவாகும். இதுவே சுத்தசன் மார்க்கம். இந்த ஞானப் பெருவழியை விளக்கவே உல கத்தில் திருஅருட்செல்வர்கள் தோன்றினர். அவதாரங்கள் முதல் வள்ளலார் வரையில் எத்தனையோ அருட்செல்வர் சன்மார்க்க ஒளி காட்டிச் சென்றனர். அவர்கள் இன்று நம்முன் பாமாலையாக விளங்குகிறார்கள். அவர்கள் அருளிய திருவாக்குகள் மூதறிவு நிறைந்த தெய்வீகக் களஞ்சியம். [illegible]

இருக்குவேதம், உபநிஷத்துக்கள், கீதை முதலியன வடமொழியில் உள்ள அருட்செல்வங்கள். உலகம் இவற்றை அறியும். தென் மொழியாம் தமிழில் ஏராளமான அருட்செல்வம் குவிந்து கிடக்கிறது. அதனைப் பலர் அறியார். கூடாச் செல்வம்; உலகின் அற்புதங் களில் ஒன்று. மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், நக்கீரர், காரைக்கால் அம்மையார், சேக்கிழார், கம்பர், வள்ளுவர், அருணகிரி, பட்டினத்தார், தாயுமானார், அருட்சோதி வள்ளலார், நம்மாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமங்கை யாழ்வார் போன்ற நிறைமொழியாளர் வாக்கமுதே வேதம் — இந்த வாக்குகளே உலகிற்கெல்லா நலந்தரும் தமிழ்ச் செல்வம். அருட்புலவர் உள்ளமும், தெள்ளறிவும், ஆர்வப்பெருக்கும், அன்பு வெள்ளமும், கடவுட் காட்சியும் கனிந்த திருவாக்குமே இங்கே அருட்செல்வமாகத் தொகுக்கப்பட்டுள்ளன; இவற்றுடன் யோக சித்தியும் பிரமசக்தியும் சேர்ந்தவை. இந்த நூல் எக்காலத்திற்கும் பயனுறும் பொதுமறையாகும். பல நூல்களை ஆராய்ந்து கருத்துக்களைத் தேர்ந்து தேர்ந்து பாசுரங்களை நிரல்படக் கோத்து நீண்ட உழைப்பினால் இந்த அருட்செல்வத்தை உருவாக்கியிருக்கிறேன். நம்மவருக்கு பைபிள் குரான் கீதை வேதம் போன்று நிலையான ஒரு தெய்வ நூல் இருக்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் இதை அமைத்திருக்கிறேன். சைவம், வைணவம், சாக்தம் கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம், சமணம் என்ற மதஉணர்ச்சி

யுடன் அன்று. எல்லாருக்கும் பயனாகும் பொதுவுணர்ச்சியுடனே தான் இதைச் செய்திருக்கிறேன். சிவம் என்றால் இன்பமளிக்கும் இறைவன். விஷ்ணு என்றால் எங்கும் நிறைந்து நலந்தரும் கடவுள் எனக்கொள்க. இதிற் சேர்க்கவேண்டிய பிற நூல்கள் பல உண்டு. ஆனால் எல்லாத் தீர்க்கதரிசிகளின் கருத்துக்களும் இந்த நூலில் அடக்கம். ஒன்றையே திருப்பித்திருப்பிச் சொல்லத் தேவையில்லை. அந்த அருட்செல்வத்தைக் கற்றால் அருட்கருத்துக்கள் புலனாகும். அருட்பெரியார் அனைவரும் உலகிற்குக் காட்டிய உண்மைநெறி விளங்கும். விரிவாக எல்லா முதுநூல்களையும் தத்துவங்களையும் அறியவேண்டுவோர் பாரத சக்தியைக் கற்கலாம். இந்நூலிற் கண்ட அருட்பெரியார் வரலாறு தனி நூலாக வரும்.

அருட்செல்வம் பாராயண நூல். பள்ளிக்கூடங்களிலும் பொதுக்கூட்டங்களிலும் கடவுள் வணக்கத்துக்கென்றே தொகுக்கப்பெற்ற நூல். சன்மார்க்கப் பிரசாரகர்களுக்குக் கையடக்கமான புத்தகசாலை போன்றது. இந்த நூலைக்கொண்டு பேசலாம், எழுதலாம், உணரலாம் அருட்பேறுபெறலாம். பேரின்புறலாம். காலை மாலை தூயநிலையிலிருந்து, அமைதியாக அமர்ந்து; வீட்டிலும்! கோயிலிலும் இன்பர் கூடி அருட்செல்வத்தைச் சேர்ந்து பாடுக [illegible] விளக்குக! இந்தப் பாசுரங்களைக்கொண்டே இன்னும் மற்ற அருளாளர் உள்ளத்தையும் விளக்கலாம். அருட்பெரியார் வரலாறுகளைச் சொல்லலாம். பௌர்ணமி, தீபாவளி, பொங்கல் நாட்களில் இரவில் அன்பர் ஊர்வலம்வந்து தெருத்தெருவாக அருட்செல்வத்தைப் பாடி விளக்கலாம். இதனால் ஊர்தோறும் அருளுணர்ச்சி தழைக்கும். அன்பு பெருகும். ஒற்றுமை ஓங்கும். தீமை ஒழியும். நன்மை விளையும்.

பொருட்செல்வத்தின் போர்வினை நீங்க
அருட்செல்வத்தை அனைவரும் வளர்ப்போம்!

சுத்தானந்த பாரதி

14-1-50.

# உண்மையான சிவவழிபாடு எது?

## அப்பர் சுவாமிகளின் முதல் தேவாரத்திற்கு

### திரு. வி. க. அவர்கள் தரும் அரிய விளக்கம்.

சிவம் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயிருப்பது. சிவம் இல்லாத இடம் இல்லை. எவ்வுயிர்க்கும் உயிராயிருப்பது சிவம். சிவம் எல்லா உயிரிலும் இருத்தலால், எல்லா உயிரும் சகோதரம் என்பதில் ஐயமில்லை.

சிவத்தை வழிபட ஒருவன் புகுகிறான். சிவமோ, தன்னை வழிபடப்புகும் ஒருவனையும் பிறவுயிரையும் தொடர்புபடுத்தியிருப்பது. அச்சிவத்தை எப்படி வழிபடுவது? ஒருவன் தன்னைப் பிறவுயிர்களினின்றும் வேறுபடுத்திச் சிவத்தை வழிபடப்புகுவானாயின் அவனது வழிபாடு துவிதத்தின்பாற்படுவதாகும். துவிதவழிபாடு பிறவித்துன்பத்தைப் போக்காது. தன்னிடத்தும் பிறவுயிரிடத்தும் விளங்குவது சிவமேயாதலால், தன்னையும் பிறவுயிரையும் வேறுபடுத்தாது, அதாவது கூறிடாது, அவன் சிவத்தை வழிபாடு செய்தல் வேண்டும். இதுவே அத்துவித வழிபாடு எனப்படும். அத்துவித வழிபாடு பிறவித்துன்பத்தைப் போக்கும். 'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை' என்பது அப்பர் அருண்மொழி.

---

148-ம் பக்கத்தொடர்ச்சி

எத்தனைதரம் ராமநாம உச்சாடணம் செய்வதிலும் பயனில்லை. உள்ள ஒருமைப்பாடொன்றே சாலச்சிறந்ததாகும். அவாவுறு ஆத்மாவின் உண்மையழைப்பே பிரார்த்தனை. பசியுடையவன் வயிறுபுடைக்க உண்டு திருப்தியுற்றாற்போல் ஆர்வமுடையஆத்மா உண்மைப் பிரார்த்தனையால் சாந்தியுறும். பிரார்த்தனையின் மந்திரசக்தியை அனுபவித்தறிந்த ஒருவன் உணவின்றிச் சிலநாட்கள் வாழ்ந்தாலும் க்ஷணப்பொழுதேனும் பிரார்த்தனையின்றி வாழ மாட்டான் என்பதை என் நண்பர்களது அனுபவத்திலும் சொந்த அனுபவத்திலும் இருந்து கூறுகின்றேன். ஏனென்றால் பிரார்த்தனையில்லாவிட்டால் அகச்சாந்தியில்லை.

மதவாதிகள் துவிதம் என்றும் அத்துவிதம் என்றும் உலகை மருட்டுவது வழக்கம். அம்மருட்டுக்கண்டு அன்பர்கள் மலைவுற வேண்டுவதில்லை. துவிதம் பிரிவை உணர்த்தலால், அது சகோதர நேயத்துக்கு இடந்தருவது. சகோதர நேயத்தை அத்துவிதமென் றும், மற்றதைத் துவிதமென்றுங்கொள்க.

ஒருவன் தன்னைப் பிறவுயிர்களினின்றும் வேறுபடுத்தாது இரண்டு சார்பிலும் ஒன்றித் தொடர்புகொண்டுள்ள சிவத்தை வழி படுவதென்பது, தன்னைப்போலப் பிறவுயிரையுங் கொண்டு வாழ்வ தாகும். இதுவே சகோதர நேயம் என்பது. தன்னிலும் பிற உயிரிலும் உள்ளது சிவம் என்று உணரும் எவனும், தன்னைப் போலவே பிறவுயிரையுங் கருதுவன்; எவ்வுயிர்க்குந் தீங்கு செய் யான்; நலமே செய்வன். எவ்வுயிரையுந் தன்னைப்போல் கருதித் தீங்குசெய்யாது நலஞ்செய்வது சகோதர நேயத்தின் இயல்பாகும். இதுவே சிறந்த சிவ வழிபாடு. 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின், தெய்வ அருட்கருணை செய்யாய் பராப ரமே' என்றார் தாயுமானார்.

'கூற்றாயினவாறு' என்னுந் திருப்பாட்டை நோக்குவோம். 'கொடுமை பல செய்தன' என்பது அப்பர் ஒருபோது தம்மையும், பிறவுயிரையும் வேறாகக் கருதியதை உணர்த்துவது. வேற்று மைக் கருத்து எல்லாக் கொடுமைகட்குங் காரணமாக நிற்றலான் அதன் பயனைக் 'கொடுமை பல' என்றார்; தம்மையும் பிறவுயிரை யும் வேறாக நினைத்தது அறியாமையாதலின், 'யான் அறியேன் என்றார். தோற்றுதென் வயிற்றின் அகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட ஆற்றேன்' என்பது கொடுமையின் விளைவு அல்லது விரிவு என்க. இனிப் பிரிந்து வணக்கஞ் செய்யாது, பிரி யாது வணக்கஞ் செய்வேன் என்பார் 'ஏற்றாயடிக்கே இரவும் பக லும் எப்பொழுதும் பிரியாது வணங்குவன்' என்றார். பிரியாது வணங்குவதாவது பிறவுயிரையும் தன்னுயிரெனக் கருதும் சகோ தர நேயமாகும். நீண்டகாலமாகச் சகோதர நேயம் பெறாதவாறு தடைசெய்துவரும் பிரிவை விலக்குமாறு, நம்பெருமான் 'கூறு ஆயினவாறு விலக்ககலீர்' என்று ஆண்டவனையே வேண்டுதல்செய் தார். இதனால் பிரிவின் ஆற்றலை அதாவது அறியாமைத்திறத்தை ஒருவாறு விளக்கியவாறும்.

# மார்க்கம்.

த. இராசையா

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டு மவன்பால்"

ஒருவனுக்கு அவனது மனைவியையும் ஒருத்திக்கு அவளது கணவனையும் எவரொருவர் குறைத்துச் சொல்லினும் அவர்களுக்கு எவ்விதம் மனந்தாழாதோ? அதுபோலவும்; தாயொருத்தி அழகில்லாத குழந்தையைப் பெற்றெடுக்க அதைக்கண்ட இன்னொருவர் அக்குழந்தை குரங்கைப்போன்றது என்று சொல்ல, அத்தாயின் மனம் எவ்வாறு சகிக்கமாட்டாதோ? அதுபோலவும், ஒருசமயத்தவனை இன்னொருசமயத்தவன் இகழ்ந்து கூறுமிடத்து அவரும் அவ்விகழ்ச்சியைப் பொறுக்கமுடிகிறதில்லை. ஒரு சமயத்தை நிந்திப்பதோ தாழ்த்திப் பேசுவதோ உத்தமமார்க்கத்திற் செல்பவனுக்கு அழகில்லை.

மதம், சமயம் என்ற சொற்கள் எங்கட்கு எதை உணர்த்துகின்றனவோ? அதை மார்க்கம் என்ற சொல் தெளிவாக உணர்த்துகின்றது. ஏனெனில் உலக வழக்கின்படி மதம் என்பது ஆணவத்தையும் சமயம் என்பது நேரத்தையும் குறிக்கின்றன. மார்க்கமென்பது வழி. ஆனபடியால் மார்க்கமென்றே நான் கூறுகின்றேன். இதனால் மதம், சமயம் என்ற சொற்கள் பிழையென்று வாசகர்கள் மனதில் நினைத்துவிடக்கூடாது.

---

முறபக்கத்தொடர்ச்சி

"கூற்றாயினவாறு' என்னுந் திருப்பாட்டின் உள்ளுறை சகோதரநேயம். இவ்வாறு எனது சிற்றறிவுக்கு விளங்குகிறது. அப்பர் சகோதர நேயத்தைப் பெற்றாரென்பதற்குச் சான்றுகள் பல உள. சண்டைக்கு 'அப்பன்நீ அம்மைநீ' என்னுந் திருத்தாண்டகச்சான்று ஒன்று சாலும். அப்பர், தம்பிலும் பிறவுயிரிலும் உள்ளது சிவம் ஒன்றே என்ற உண்மையை உணர்ந்து, சகோதர நேயத்தில் நின்றவராதலால், அவரை நஞ்சமுதம் கொல்லவில்லை; நீற்றறை எதிர்க்கவில்லை; யானை பணிந்து சென்றது; கடல் தாங்கிற்று. எங்கும் அன்பாகிய சிவத்தைக் கண்டோர்க்கு எங்கணும் அன்பாகிய சிவமே விளங்கும், இது சகோதர நேயம்.

கிறீஸ்துநாதர் காட்டியவழி கிறீஸ்துமார்க்கம் எனப்படும். புத்தர் காட்டிய வழி புத்தமார்க்கம் எனப்படும். முகம்மதுநபி காட்டியவழி முகம்மதுமார்க்கம் எனப்படும். சிவனைநோக்கிச் செல்லும்வழி சைவமார்க்கம் எனப்படும். ஒன்றாகிய இறைவன் சந்நிதானத்தை நோக்கி எந்தவழியால் சென்றாலும் எல்லாரும் அடையும் இடம் ஒன்றே.

இதை நாமக்கல் கவிஞர் தெளிவாக விளக்குகின்றார்.

"அல்லா என்பார் சிலபேர்கள்
அரன் அரி என்பார் சிலபேர்கள்
வல்லான் அவன் பரமண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா நிர்வாணம்
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே."

"அந்தப் பொருளை நாம்நினைத்தே
அனைவரும் ஒன்றாய்க் கூடிடுவோம்
எந்தப்படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதல் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலுங் கெடுதல் செய்யாமல்
வந்திப்போம் அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்."

உலகத்தில் எத்தனை மார்க்கம் உளதோ அத்தனை மார்க்கத்தின் உண்மையும் முடிவிடத்தில் ஒன்றே. மாவலிகங்கையும் களனி கங்கையும் வேறு வேறு திசைகளிற் பாய்ந்தாலும் முடிவிடம் வங்காளக் கடலே. அங்கே எல்லா நீரும் உப்பு நீரே.

"இந்தமதம் அந்தமதம் என்றலையேல் நெஞ்சே
எந்தமத தூஷணையும் எள்ளளவும் வேண்டாம்
சொந்தமதம் தந்தமுள்ளே தொந்தமற்ற சுகமே
அந்தமில்லை ஆதியில்லை ஆனந்தம் யானே."

இது கவியோகி சுத்தானந்தரின் வாக்கு.

# திருவள்ளுவரும் கடவுட் கொள்கையும்.

[தென்னுபிரிக்கா—டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.]

திருவள்ளுவர் கூறிய கடவுளின் தன்மையைக் கூறுவோம் உலகில் பல மதங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் கடவுளுக்கு வேறு வேறு பெயரைக் கூறுகின்றனர் உதாரணமாகப் பாருங்கள். வைணவர்கள் திருமால் ஒருவர்தான் முழுமுதற்கடவுள், அவரைப் பின்பற்றினால்தான் அழியாதபேரின்பமாகிய வீடு பெறலாமென விளம்புகின்றனர். சைவர்கள் தங்கள் கடவுள் சிவனென்றும், அவரைப் பின்பற்றுவோரே வீடு பெறலாமென்றும் கூறுகின்றனர். மகம்மதியர்கள் அல்லா ஒருவரே கடவுளென்று அறைகின்றனர். கிறிஸ்தவர்கள் ஏயேசுவைப் பின்பற்றுதல்வேண்டும், அவரே மக்களின் பாவத்தைமன்னித்து முத்தி உலகில் இருத்துவார் என இயம்புகின்றனர். இங்ஙனமே சைனர் புத்தர் முதலிய மதத்தினர்கள் வேறு வேறு கூறிக்கொண்டு தமக்குத்தாமே கலகம் விளைவித்துக்கொள்கின்றனர். ஆனால் இங்ஙனம் மாறுபடும் மதத்தினர் அனைவரும் திருவள்ளுவர் கூறிய அக்கடவுளை ஒப்புக்கொள்கின்றனர். திருவள்ளுவர் கூறிய கடவுளின் இயலைக் கூறுகின்றேம்.

தானே விளங்கிய அறிவுடையவனே கடவுள் ஆவான். அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் விரைந்து சென்று அவர்க்கு அருள் புரிபவனே கடவுள். ஒருபொருளைத் தனக்கு வேண்டுமென விரும்புதலும், ஒரு பொருளை வேண்டாமென வெறுத்தலும் இல்லாதவனே கடவுள். நல்வினை இன்பத்தைத்தந்து அதன் வழியில் இழுத்து உலகவாழ்க்கையில் ஈடுபடுத்துவதால் நல்வினையும், தீவினை.........ஈடுபடுத்துவதால் தீவினையும் ஆகிய இவ்விரு வினைகளையும் இயற்கையாகவே நீங்கியிருப்பவனே கடவுள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தின் உணர்ச்சிகளின் வழியில் செல்லாமல் நீங்கி நிற்பவனே கடவுள். ஒருவாற்றானும் தனக்கும் பிறர் நிகரில்லாமல் நடு நிற்பவனே கடவுள். உயிர்க்கு முழு நன்மை யடையும் இரக்க மனத்துடன் தருமமாகிய ஆழியைச்

செலுத்திக்கொண்டிருக்கிறவனே கடவுள். தன் வயத்தனாதல், தூயவுணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல் முற்றுமுணர்தல், முதலியகுணங்களையுடையவனே கடவுள், என்று இங்ஙனம் கடவுளின் குணங்களை கூறினர்.

இக்கடவுட் கொள்கையை ஒப்புக்கொள்ளாத மதத்தினர் எவர் இருக்கின்றார்? இவை, எல்லா மதத்தினர்க்கும் ஏற்ற கொள்கையன்றோ? இனி மற்றொரு முக்கிய விஷயம் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது. நமது நாட்டில் புதிதாகத் தோன்றிய மதங்கள் சில, விக்கிரகங்களை வணங்குவது கூடாது எனக் கூறுகின்றன. சில மதத்தினர் விக்கிரக ஆராதனமே சிறந்ததென மொழிகின்றனர். இவ்விரு கட்சியினருக்குள் எந்தக் கட்சியினருக்குத் திருவள்ளுவர் ஆதரவளிப்பார் என்று பார்த்தால், இரு கட்சியினருக்கும் ஆதரவாகவே இருக்கின்றார். விக்கிரக ஆராதனம் வேண்டுமென்றும் திருக்குறளில் யாண்டும் கூறப்படவில்லை. விக்கிரகத்தை வணங்கக் கூடாதென்றும் கூறப்படவில்லை. ஆதலால் இவர் விக்கிரக ஆராதனத்தை ஒப்புக்கொள்ளுகின்றவருக்கும் விக்கிரக ஆராதனத்தை ஒப்புக்கொள்ளாதவர்க்கும் தலைவராக விளங்குகின்றார். எல்லோரும் ஒப்புக்கொள்ளுமாறு கடவுள் வணக்கத்தின் அவசியத்தை "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ னற்றாள் தொழாரெனின்" என்ற குறளால் எவ்வளவு நுணுக்கமாக நுவன்றிருக்கின்றார் என்பதைக் கண்டு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோமன்றோ?

நமது நாடு ஒற்றுமை இழந்திருப்பதற்குக் காரணமானவைகளில் மதம் ஒரு முக்கியகாரணமென்று எனது எண்ணமாகும். பண்டைக்காலத்தில் மதங்கள், மக்கள் ஒருவரோடொருவர் அன்பு கொண்டு பிணைந்து வாழ்வதற்காகவே ஏற்பட்டனவாகும். உலகில மக்களின் தீமையைப் போக்கவே மதங்கள் ஏற்பட்டன என்பதை 'எச்சமயத்தோர் சொல்லும் தீதொழிய நன்மை செயல்' என்ற திருவாக்கால் அறியலாம். ஆனால் இக்காலத்தில் மதவேறுபாடுகளே உலகத்தில் அடிக்கடி கலகங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை அடிக்கடி நிகழும் இந்து முஸ்லிம் கலகங்களால் அறிகின்றோம் அன்றோ? சமரச உணர்ச்சியான மதம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமெனப் பல பெரியோர்கள் முயற்சி

117ம் பக்கத்தொடர்ச்சி.

# ஆத்மசித்திக்கான சாதனங்கள்.

## (2) பரிசுத்தம்.

[ஸ்ரீ சுந்தராம்பாள் ராகவாச்சாரி]

மனம், வாக்கு, காயம் மூன்றிலும் பரிசுத்தம் வெகு அவசியம். இது இல்லாமல் ஆத்மஞானம அடைவது அசாத்தியம். ஆத்மஞானத்தை நாடுபவர், இல்லறவாழ்க்கையின் சிற்றின்பசுகங்களேயே பெரிதெனக்கருதமாட்டார். பிராகிருதமான இந்திரிய சுகபோகங்களேயே நாடிநிற்கும் நிலை மிருகத்தன்மையது. மனிதவர்க்கத்தின் பரிணமநிகழ்ச்சி முன்னேறி நாளடைவில் அபிவிருத்தியடைகையில், அனுபவ ஞானமும் அதிகரிக்கிறது. மானஸீக அவஸ்தை தனது உரிமையை வற்புறுத்தி நிலைநாட்டி, மேலோங்கிநிற்பதனுல் மனிதனது மனவிகாசம் பிராகிருதமான இந்திரிய உணர்ச்சியை ஒளிமங்கச்செய்து மறைத்துவிடவல்லது. கடசியில் ஆதமசம்பந்தமான மகிழ்ச்சியின்பம், மேற்கூறிய இரண்டு உணர்ச்சிகளேயும் வென்று தாண்டவமாடும்.

---

முற்பக்கத்தொடர்ச்சி

செய்து கண்டுபிடித்தனர். கண்டு பிடிக்கின்றனர். ஆனுல் இந்த நோக்கத்தையே நமது திருவள்ளுவர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறியிருக்கின்ருரென்ருல் அவரின் பெருமையை எவ்வாறு கூறுவது?

அன்பர்களே! நீங்கள் சமரச எண்ணத்தையும் மதத்தையும் விரும்புவீர்களானுல் திருவள்ளுவரைப் பின்பற்றுங்கள். அவர் சமரச வழியை உணர்த்துவார் என்பதை உண்மையாக உணர்கின்றேன். எல்லாக்கடவுளும் ஒருவரே, ஒரு கடவுளே பலவுருவாக இருக்கின்ருர். கடவுளுக்குச் சிவனென்றும், திருமாலென்றும், பலபடியாகப் பெயரிட்டிருப்பதெல்லாம் பிற்காலத்தில் ஏற்பட்டனவே. பண்டைத் தமிழர் உருவும் பேரும் ஊரும் இல்லாத கடவுளேயே வணங்கினர் என்பதை திருவள்ளுவர் திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தை நுணுகியாராய்ந்தால் அறியலாம்.

இல்லறவாழ்க்கையின் சுகானுபவங்கள் உண்மையில் சுகானுபவங்களல்ல; இந்திரியங்களுக்கடிமைத்தனமாக்கும் சிறைப்பாடு என்று உணர்ந்து, ஆத்மஞானம் சிறிது சிறிதாக உதித்து மேலெழுந்துவரும் பொழுதுங்கூட, இடையிடையே பூர்வவாசனை சிறிது நேரம் மனிதனைப் பீடிப்பது இயற்கையே. தன்னைவிட்டு அகன்றதாக எண்ணிய இவ்வாசாபாசங்கள் உண்மையில் அகலாது துயிலுற்று நின்றனபோலும்! இவ்வாசாபாசங்களையும், சிற்றின்பவுணர்ச்சிகளையும் ஒழித்துவிட்டுப் பரிசுத்தமான சிந்தையுடன் ஆத்மஞானத்தை நாடியடைய எத்தனிப்பதில் நாம் ஏன் எளிதில் சித்தியடைவதில்லை? நாம் அடையவேண்டுமென்று ஆசைப்படும் உயிர்நிலைத்தும், அதை இச்சித்தபடியடையவொட்டாது இடையிடையே எழுந்து போக்குக்காட்டும் சிற்றின்பவுணர்ச்சிக்கும் நீண்டகாலம் போர் நடப்பதின் மர்மம் என்ன? நமது ஜடசரீரத்தின் இயக்கங்கள்தான் காரணம். அவைகளை ஒரேமூச்சில் மாற்றிவிடமுடியாது. நாம் செய்யும் பாவக்கிரியைகள் பலவுக்கும் அவையேதான் அடிப்படையான கல்கோட்டை. அக்கோட்டையைப் பலமான முற்றுகைபோட்டு, வேட்டுவைத்துச் சிதறச்செய்து மேல்நோக்கிச் சிந்தையைச் செலுத்துவது சிறிதுசிரமமானகாரியம்; ஆனால் செய்தேதான் ஆகவேண்டும். உண்மையான பக்திசிரத்தை; விடாமுயற்சியிரண்டும் இருந்தால் இக்காரியம் நிச்சயமாய் சித்தியடையும். பரிசுத்தமான உன்னதநோக்கங்களையே மனதில்கொண்டு, பிராகிருதமான இந்திரியசுகபோகங்களில் இடையிடையே ஏற்படக்கூடிய உணர்ச்சிகளை மறக்கடிக்கவேண்டுமேயல்லாது, அவ்வுணர்ச்சிகளை எதிர்த்துப் போராடிப் போக்கடிக்கயத்தனிப்பது சரியான முறையல்ல. எதிர்த்துப் போக்கடிக்கயத்தனிப்பதால் அவ்வாசாபாசங்கள் மறுபடி நினைவூட்டப்பெற்று நிலைபெறக்கூடும். ஆகலால் புனிதமான உன்னத உணர்ச்சிகளையேயுன்னி அவைகளின் மேலீட்டால் கீழ்த்தரமான உணர்ச்சிகளை மறப்பதே முறை.

மனம், வாக்கு, காயம் இவைகளைப் பரிசுத்தமாக வைத்திருப்பதே, ஆத்மஞானத்திற்கும் ஆத்மசித்திக்கும் தேவையான அனுகரணம். பரிசுத்தம் என்பது, மனோபலம், தைரியம், நேர்மை, செல்வாக்கு, ஆத்மவிளக்கம், அழிவின்மை இவற்றிற்கெல்லாம் அடிப்படையான சாதனமாகும். அதையே சிரமேற்கொண்டு நடத்தல் ஆத்மசித்திக்குத்தேவையான இரண்டாவது சாதனம். ஏனைய மூன்றுசாதனங்களையும் பின்னர் விளக்குவாம்.

# செய்தித்திரட்டு.

## தெல்லிப்பழை கிழக்கு பாலர் ஞானோதயசபை 4ம் ஆண்டு ஆரம்ப விழா.

ஷ்விழா திரு. சு. சரவணமுத்து அவர்கள் தலைமையில் 11-2-50 சனிக்கிழமை நடைபெற்றது. அத்தருணம் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் அவர்கள் சிவபுண்ணியங்கள் என்பதைப்பற்றியும் திரு சி. நாகையா அவர்கள் சைவசமயமும் நவீனக்கொள்கைகளும் என்பது பற்றியும் பேசினார்கள். அநேக மாணவ மாணவிகளும் தேவார உயங்கியாசங்களிற் பங்குபற்றினர்.

பரிசளிப்பு விழா. அனுராதபுரம விவேகானந்த சபையின் சார்பாக விவேகானந்த வித்தியாலய மாணவர்களுக்குப் பரிசுவழங்குவதற்கான விழா ஒன்று 15-2-50 புதன்கிழமை திரு. என். மாணிக்க இடைக்காடர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆண்டு நிறைவு விழா. பதுளை சைவபரிபாலனசங்க இருபத்துநன்காவது வருடாந்தக்கூட்டம் 25-2-50 சனிக்கிழமை நடைபெற்றது. அத்தருணம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) கதிர்காமத்தில் இருக்கும் அநேக தமிழ்ப்பிள்ளைகள் எவ்வித கல்விவசதியுமின்றி யிருப்பதால் அங்குள்ள அரசினர் சிங்களப்பாடசாலையில் ஒரு தமிழ் ஆசிரியரை வித்தியாபகுதியினர் உடனே நியமிக்கவேண்டும்.

(2) திருவிழாக்காலங்களில் பத்தாவது மைல்வரை வாகனப் போக்குவரவுக்கேற்க வசதிகளை அரசாங்கம் செய்யவேண்டும்.

(3) கதிர்காமத்திலுள்ள அரசினர் வைத்தியசாலையில் இறந்தோரை வைத்திருக்கும் மைய அறை இல்லாதது பெரிய குறைபாடாகும். அரசாங்க வைத்தியப்பகுதி இக்குறையை உடனே நீக்கவேண்டும்

நாவலப்பிட்டி இந்துவாலிபசங்க 31ம் ஆண்டு நிறைவு. விழா 11-3-50 சனிக்கிழமை கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் பண்டிதர் சி கணபதிப்பிள்ளை அவர்கள் "சைவத்துறை" என்பது பற்றி இனியதோர் சொற்பொழிவாற்றினார்கள்,

கண்டி சைவமகாசபை 24ம் ஆண்டு நிறைவுவிழா. 12-3-50 ஞாயிற்றுக்கிழமை சபைமண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "நற்றமிழ்" என்பதுபற்றி இனியதோர் சொற்பொழிவாற்றினார்கள்.

———

# சந்தாநேயர்களுக்கு!

1 ஆத்மஜோதியின் ஆயுள்சந்தாதார்களும் வருடசந்தாதார்களும் இன்னும் செலுத்தவேண்டிய சந்தாக்களைத் தயவுசெய்து உடனே அனுப்பி உதவுமாறு அன்புடன்வேண்டுகின்றோம். அவர்கள்நம்மை ஆதரிக்கஆதரிக்க நாமும்அவர்களுக்கு ஊழியம்புரிய சித்தமாயிருக்கிறோம்.

2 ஆத்மஜோதி இப்போ 32பக்கங்களுடன் மாத்திரம்தான் வெளிவருகிறது. இதேசந்தாவுடன் இன்னும்கூடியபக்கங்களை நடத்தலாமா? என்று கேட்டால் ஆம் நடத்தலாம்; ஏன்அப்படி நடத்தவில்லை? நடத்தாமைக்குரியகாரணம் வாசகர்களின் கையிலேதானுளது. இப்போதிருக்கும் ஒவ்வொருஅங்கத்தவரும் குறைந்தது ஒருசந்தாதாரையாவது சேர்த்து உதவினால் 48பக்கம்கொண்டதாகச் சோதியை நடத்தமுடியும். பத்துஊர்களில் பத்துத்தொண்டர்கள் ஆளுக்கு நூறுபேர்வீதமாவது சந்தாதாரராகச் சேர்த்துஉதவினால் குறைந்தது 40பக்கங்களைக் கொண்டாவது வெளிவரலாம். சோதியில் இடம்பெறத்தக்கதான நல்லவிளம்பரங்களைத் தந்தோ, சேகரித்தோ உதவினால்விசேடமலர்கள்வெளியிடமுடியும். அணில்செய்தஉதவிபோல் உங்கள் மலைபோன்றஉலகஅலுவல்களுக்கிடையே அணுவளவுசோதி சோதிக்குத்தொண்டு செய்தால் எதிர்காலத்தில் சோதியின் வளர்ச்சியை நினைத்து ஒவ்வொரு சந்தாதாரரும் மகிழ்ச்சிகொள்ள இடமுண்டல்லவா!

3 இந்தியாவிலிருந்து பணம்அனுப்பும் அன்பர்கள் தயவுசெய்து பணம் அனுப்பியதையிட்டு தெளிவான விலாசத்துடன் நிலயத்திற்குக்கடிதம் ஒன்றும் எழுதுக.

---

## ஆத்ம சோதனை.

[சுத்தானந்தரின் அனுபவங்கள்

தமிழுலகம் ஆவலாக எதிர்பார்த்த ஆத்மசோதனை அச்சில் உள்ளது. 500பக்கங்கள் கொண்ட அழகியநூலாக வெளிவரும். சுவாமிகளின் பிறந்தநாளன்று மே 11ந் உ அதைத்திருவிழாநடத்தி அவர்களுக்கு அளிக்க சுத்தசங்கம் ஏற்பாடுசெய்திருக்கிறது. சுவாமிகளின் நூல்களையும் கொள்கைகளையும் பரப்பவே சுத்தசங்கம் சென்னையில்உருவாகிறது, ஆசமசோதனை வேண்டும் அன்பர்கள், சுத்தசங்கம், வான்கார்டு பில்டிங்கல், 2 லைன்பீச் மதராஸ். என்றவிலாசத்திற்கு அல்லது புதுச்சேரி, புதுயுகநிலையத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

☞ மேமாதம் முதல்தேதி எழுதினால் நல்லது.

Registered at the G. P. O, as a News Paper

வைத்தியன் தமிழ் மாத வெளியீடு.

சித்த ஆயுள்வேத வைத்திய மறுமலர்ச்சிக்காகவும்
வைத்தியர்களின் அறிவு வளர்ச்சிக்காகவும்
இலங்கையில் பிரசுரிக்கப்படும் ஓரேபத்திரிகை இதுவே
இலங்கை இந்தியாவுக்கு வருடச்சந்தா ரூ. 5/- தனிப்பிரதி ச. 50.

''வைத்தியன் ஆபீஸ்''

53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம். (இலங்கை)

---

K. S. K. Vaitialingampillai & Co.

"JEYALUXMI" STORES

JEWELLERS & TEXTILE MERCHANTS.

85, TRINCOMALEE STREET, KANDY.

பெண்கள் விரும்பும் நூதன கலர்களிலும், பாடர்களிலும் உள்ள
பெங்களூர், காஞ்சிவரம், கும்பகோணம், டெனறிஸ், காஸ்மீர் பட்
டுச் சேலைகளும் மற்றும் நூல் சேலைகள், வேஷ்டிகள், சரிகை துப்
பட்டிகள், அங்கவஸ்திரங்கள்

எங்களிடம் சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

உத்தரவாதமுள்ள பவுண் நகைகள் ஆடர்படி
குறித்தநேரத்தில் கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு
செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை எங்களை பரீக்ஷித்துப்
பாருங்கள் உண்மை விளங்கும்:

---

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்; நா. முத்தையா 'ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.
[சிலோன்]
நாவலப்பிட்டி, சரவண பிரஸில் பதிப்பித்தது 14-3-50-